Registered as a Newspapers in Ceylon
விலை சதம் 10

ஈழநாடு

மலர் 7
EELA NADU
இதழ் 140
National Tamil Daily
தேசிய தினசரி
(1-7-65)
விசுவாவசு ஆனி 17 ரபி அவ் பிறை 1 வியாழக்கிழமை

பெண் ஆணாக மாறிய விந்தை!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் வீதியிலுள்ள திரு ஆர். பி. வீரசிங்கத்திற்கு 1951-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை பிறந்தது. பெற்றோர் வசந்த குமாரி என்று பெயரிட்டார்கள். வளர்த்தார்கள் பள்ளிக்கனுப்பினார்கள். வசந்த குமாரிக்கும் 14 வயது வந்துவிட்டது. பள்ளியிலும் கல்லூரியில் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்ற அதிபர் பிறப்புச்சாட்சிப் பத்திரத்தைக் கோரியிருந்தார். பிறப்புச்சாட்சிப்பத்திரத்தைப் பெறுவதற்காக மனுச்செய்து அதனைப் பெற்ற பொழுதுதான் பெண் ஆணாக மாறிய விந்தை தெரியவந்தது.

இதுபற்றி பிள்ளையின் தகப்பன் பதிவுக்காரருக்கு முறையிட்டபொழுது அவர்கள் இதனை ஆஸ்பத்திரியில் இருந்து கொடுத்த தகவலின் பேரிலேயே இப்படிப் பதிவுசெய்யப்பட்டதென்று கூறினார்களாம். பெண் - ஆணாகி, பெயரிலும் மாற்றம் செய்துவிட்டார்கள் யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரி ஊழியர்கள்.

ஆஸ்பத்திரியில் பெண்ணை ஆணாக பதிவுசெய்ததாலும் வசந்தகுமாரியை வசந்தகுமார் என்று பதிவுசெய்ததாலும் தற்பொழுது இந்தப் பெயரை மாற்றுவதற்கு பணமும் வீண் நேரமும் விரயம் செய்யப்படவேண்டியிருக்கின்றது. முடிவில்

6-ம் பக்கம் பார்க்க

சிறுபான்மையினரின் உரிமைக்கு பாதுகாப்பு

விரைவில் சட்டம் வரும் என்கிறார் உள்நாட்டு மந்திரி

கொழும்பு, புதன்

இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு உத்தரவாதமளிக்கும் சட்டமொன்றை தேசிய அரசாங்கம் விரைவில் கொண்டுவந்து நிறைவேற்றவிருக்கிறது. இதற்கான மசோதா விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இத்தகவலை உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யூ. தகநாயகா காலியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் வெளியிட்டார்.

டாக்டர் தகநாயகா மேலும் பேசுகையில் இடதுசாரி எதிர்க்கட்சித் தலைவர்கள் தேசிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகவே வேலைநிறுத்தங்களுக்கு ஆயத்தம் செய்துவருவதாகச் சொன்னார். இடதுசாரித்தலைவர்களால் உருவாக்கப்படும் எந்த நிலைமையையும் சமாளிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதென்று மந்திரி தகநாயகா கூறினார்.

பல்கலைக் கழகத்தில் ஏற்படவிருக்கும் இடநெருக்கடி

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை முடிவு ஏற்படுத்தியுள்ள புதிய பிரச்னை

கொழும்பு, புதன்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 2145 மாணவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்ள இடமிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியப் பிரிவில் 206 பேருக்கும் என்ஜினியரிங் பிரிவில் 150 பேருக்கும் விஞ்ஞானப் பிரிவில் 850 பேருக்கும் கலைப் பிரிவில் 1800 பேருக்கும் பல்வைத்தியப்பிரிவில் 25 பேருக்கும் விவசாயப் பிரிவில் 35பேருக்கும் மிருகவைத்தியப் பிரிவில் 35 பேருக்கும் தற்போது இடமிருக்கிறது.

சமீபத்தில் நடைபெற்ற ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் நான்கு அல்லது மூன்று பாடங்களில் சித்திபெற்றுள்ள சகல மாணவர்களும் ஜூலை 9-ந் திகதிக்கு முன் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இந்த ரீதியில் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கான தகுதி பெற்றிருப்பார்களென நம்பப்படுகிறது.

கிழக்கு மாகாணத்துக்கு கவர்னர் ஜெனரல் விஜயம்

கொழும்பு, புதன்

கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா கிழக்கு மாகாணத்திற்கான சுற்றுப் பிரயாணத்தை இன்று காலை ஆரம்பித்தார்.

இன்று அவர் அம்பாறைக்கு விஜயம் செய்து கல்ஓயா பள்ளத்தாக்கைப் பார்வையிடுவார். நாளை வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையைப் பார்வையிடுவார். மட்டக்களப்பு நகரசபை கவர்னர் ஜெனரலுக்கு ஒரு வரவேற்பளிக்கவிருக்கிறது.

நாளை காலை 8 மணிக்கு கவர்னர் ஜெனரல் மட்டக்களப்புக்கு வந்து சேருவார். 8-05-க்கு வாழைச்சேனை காகிதத்தொழிற்சாலைக்கும் புறப்படுவார் 9-15-க்கு காகிதத் தொழிற்சாலை வந்தடைவார். கைத்தொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எஸ். ஜே. வல்பித்தா, காகித கூட்டுஸ்தாபன தலைவர் திரு. கே. சி. தங்கராசா ஆகியோர் கவர்னர் ஜெனரலை அங்கு வரவேற்பர்.

நண்பகலில் காகித கூட்டுஸ்தாபன தலைவர் தமது வாசஸ்தலத்தில் கவனர் ஜெனரலுக்கு நண்பகல் விருந்தளிப்பார். பிற்பகல் 3-30-க்கு கவர்னர் ஜெனரல் மட்டக்களப்புக்குப் பயணமாவார். மாலை 4-30-க்கு மட்டக்களப்பு நகரமண்டபத்தில் அவருக்கு ஒரு பொதுவரவேற்பளிக்கப்படும். மாலை 5-15-க்கு அம்பாறைக்குச் செல்வார்.

நாளை மறுதினம் கவர்னர் ஜெனரல் சேனநாயகா சமுத்திரத்திற்கு விஜயம்செய்வார். சேனநாயகா சமுத்திரத்தில் அவர் படகொன்றில் உல்லாசப்பயணம் செய்வார்.

எழுத்தாளர் மகாநாடு

பெல்கிரேட், ஜூன் 30

பிரபல எழுத்தாளர்களைக் கொண்ட 47 நாடுகளின் மகாநாடு நாளை இங்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகிறது.

பயமுறுத்தல் பற்றி புலன்விசாரணை

கொழும்பு, புதன்

ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்தனாவையும் உள்விவகார அமைச்சர் டாக்டர் டபிள்யூ தகநாயகாவையும் கொலை செய்துவிடப் போவதாக கைமுனு இரகசிய இயக்கத்தினர் செய்திருந்த பயமுறுத்தல் சம்பந்தமாக இரகசியப் பொலிசார் தீவிரமாக புலன்விசாரணை செய்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கவுல் காலமானார்

புதுடில்லி, ஜூன் 30

திட்டக்கமிஷன் உறுப்பினர் திரு. பி. கே. கவுல் இன்று காலமானார். அவருக்கு வயது 48. சமீபத்தில்தான் அவர் திட்டக்கமிஷனில் சேர்ந்தார்.

இந்தோ-பாகிஸ்தான்

கட்ச் பகுதியில் இரு தரப்பு துருப்புகளும் வாபஸாகும்

சண்டை நிறுத்த ஒப்பந்த விதிகளின் விபரம்

இடையில் பிரச்னை தீராவிடில் ஐ. நா. காரியதரிசியிடம் போகும்

புதுடில்லி, ஜூன் 30

கட்ச் பகுதியில் எல்லையை வரையறுக்கும் பேச்சுக்கு வழி செய்யும் சண்டைநிறுத்த ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டது. அப்போது பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. பிரீமனும் பிரசன்னமாகியிருந்தார்.

இந்த ஒப்பந்தப்படி கடந்த ஜனவரி 1-ம் திகதி இருந்த நிலையை ஏற்படுத்த இரு அரசாங்கங்களும் ஒப்புக் கொள்கின்றன.

இருதரப்பாரும் துருப்புக்களை விலக்கிக் கொண்டதுடன், சாட்பகுதியில் துருப்புகளுக்கு பதில் பொலிஸ் நிலைகொள்ளவும் ஒப்பந்தம் வழிவகுக்கிறது. பாரத-பாகிஸ்தான் பொலிசார் முன்பு இருந்ததைப்போல் ரோந்து சுற்றி வருவார்கள்,

உடனடியாக இருதேச அதிகாரிகளும் சந்திக்க ஒப்பந்தம் வழி செய்கிறது,

ஒருவாரத்தில் இரு நாட்டு மந்திரிகளும் சந்திக்க வேண்டும் என்பது ஏற்பாடு.

இரு மாதங்களில் மந்திரிகளுக்கிடையே உடன்பாடு இல்லாவிடில் விசாரணைமன்றத்திடம் பிரச்னை தாக்கல் செய்யப்படலாம்.

4 மாதங்களில் 3 பேரடங்கிய விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும். இருநாடுகளிலிருந்தும் தலா ஒவ்வொரு பிரதிநிதியும் இரு நாடுகளும் தேர்ந்தெடுக்கும் தலைவர் ஒருவரும் அதில் கடமையாற்றுவார்கள்.

இவ்விசாரணைமன்றம் பிரச்னையைத் தீர்க்கத் தவறினால் ஐ. நா. காரியதரிசி யுதாண்டிடம் பிரச்னை சமர்ப்பிக்கப்படும். இதிலிருந்து வரும் முடிவை இருதரப்பாரும் ஏற்க வேண்டும்.

காணி மந்திரி நடவடிக்கை

கொழும்பு, புதன்

காணி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காணிகள் பெற்றவர்களுக்கும் காணி வழங்கும் திட்டத்தை விரைவில் அமுல் நடத்தும்படி காணி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தாவுக்கு காணி நீர்ப்பாசனமந்திரி திரு. சி. பி. டி' சில்வா தெரிவித்துள்ளார்.

வேலையற்றவருக்கு வேலைவாய்ப்பு

கொழும்பு, புதன்

அரசாங்கத்தினால் அமுல் நடத்தப்படவிருக்கும் புதிய திட்டங்களில் வேலையற்றிருப்பவர்களுக்கு வேலை வழங்குமாறு அரசாங்கத்துக்கு சிபார்சு செய்ய வேலைவாய்ப்பு சம்பந்தமாக ஆராய்ந்த மந்திரிசபை உப கமிட்டி நேற்று தீர்மானித்தது.

வேலையற்றவர் குழு ஒன்றை உருவாக்கி அக்குழுவில் உள்ளவர்களுக்கு வேலை வழங்கலாமெனவும் கமிட்டி அரசாங்கத்துக்கு சிபார்சு செய்வதென முடிவு செய்துள்ளது.

இன்று

கொழும்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 15-வது வருட தினம் இன்றாகும். 1950-ம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி நடைபெற்ற வெளியுறவு மந்திரிகள் மகாநாட்டில் செய்யப்பட்ட முடிவை அடுத்தே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கொழும்புத்திட்டத்தின் மூலம் இலங்கையிலிருந்து 2000க்கு மேற்பட்டவர்கள் வெளிநாடு சென்று பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெற்றதுமல்லாமல், பல நாடுகளிலிருந்து தொழில் நுட்ப, உபகரண உதவிகளும் இலங்கைக்கு கிடைத்துள்ளன,

ஃ ஃ ஃ

மக்கள்வங்கியின் 4வது ஆண்டு நிறைவுவிழா இன்றாகும். நேற்றுடன் 4 வருடங்கள் முடிவடைந்து இன்று 5-வது வருடம் ஆரம்பமாகின்றது. 1961ம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு இப்பொழுது நாடெங்கிலும் 45 கிளை வங்கிகள் உண்டு

மணிவாக்கு

கெட்டவனென்று யாருமே கிடையாது. அவரிடமுள்ள உண்மையை உணர்ந்து, அதை வெளிக்காட்டும்படி அவருக்கு உதவி செய்யவேண்டும்.

— சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

EELA NADU National Tamil
Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆனி மீ 17 உ (1-7-65)

மகிழ்ச்சியளிக்கும் விஷயம்

கட்ச் பகுதியில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் இன்று முதல் அமுலுக்கு வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கும் விஷயம். இந்த ஒப்பந்தத்துக்கு வழிவகுக்கும் முயற்சியில் சலியாமல் செயலாற்றிய பிரிட்டனுக்கு இச்சமயம் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.

அண்டைய நாடுகளான பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே இந்த ஒரு பிரச்னை தீர்க்கப்பட்டுவிட்டதாயினும், காஷ்மீர் உள்ளிட்டு இன்னும் தீர்க்கப்படாத பல பிரச்னைகள் இருக்கின்றன. கிழக்குப் பகுதியிலும், மேற்கு பகுதியிலும் அடிக்கடி எல்லைக் கைகலப்புகள் மூண்ட வண்ணம் இருக்கின்றன; எல்லைகளில் அமைதியாக வாழ்ந்து வரும் மக்களின் உயிர்கள், அங்கு அடிக்கடி ஏற்பட்டு வரும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி வருகின்றன.

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக காஷ்மீரப் பிரச்னை இருக்கிறது. இந்திய பாகிஸ்தான் உறவில் இது மிகச் சிக்கலான, கஷ்டமான பிரச்னையாய் விளங்கிவருகிறது. தீர்க்கப்படாத இத்தகைய பிரச்னைகளால் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் மட்டும் ஏற்படவில்லை. நாளுக்கு நாள் இரு நாடுகளுக்குமிடையே பகைமையை அதிகரிக்கவும் அவை வழி செய்கின்றன.

இக்கட்டத்தில் இந்தோ—பாகிஸ்தான் தகராறுகளைத் தீர்க்கும் விஷயத்தில் பிரிட்டன் காட்டிய முன்மாதிரியை இரு நாடுகளும் மேலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்திய உப-கண்டம் சம்பந்தமாக பிரிட்டனுக்கு நீண்டகால நேரடி அனுபவம் உண்டு. இதனால் இதர நாடுகளைவிட பிரச்னையை நன்கு புரிந்துகொள்ளும் ஆற்றலும் அதற்குண்டு. அதே சமயம் காமன்வெல்த்நாடு என்ற முறையிலும் இந்தோ—பாகிஸ்தான் பிரச்னையைத் தீர்க்க பிரிட்டனுக்கு ஆவலும், அக்கறையும், கடமையும் இருக்கின்றது. தங்கள் பிரச்னைகளைத் தாங்களே அமைதியாகத் தீர்த்துக்கொள்ள முடியாவிடில் பிரிட்டன் போன்ற அனுபவமுள்ள பொதுநாடுகளின் உதவி மூலம் அப்படிச் செய்வது அதிக சுலபமும் மரியாதையுமாகும். அரசியல் சுதந்திரமடைந்தும், இருநாட்டு மக்களும் பொருளாதார சுதந்திரமும் ஏழ்மையிலிருந்து விடுதலையும் பெற முடியாமலுள்ளது. காரணம் இவ்விரு நாடுகளிடையேயும் நட்பும் பரஸ்பர ஒத்துழைப்பும் இருக்க வேண்டியதற்குப் பதில், விரோதமும், பீதியும், தப்பெண்ணங்களும் நிலவுவதுதான், வருமானத்தில் பெரும் பகுதியையும் இரு நாடுகளும் ஆயுதப் பெருக்கத்துக்காகவும், இராணுவ முஸ்தீபுகளுக்காகவும் செலவழிக்கின்றன.

இந்திய பிரதமரும் பாகிஸ்தான் அதிபரும் லண்டனில் நேரில் சந்தித்துப் பேசமுடிந்தது, இருதேச தப்பெண்ணங்களும் தீரவும், புதிய நல்லுறவு சகாப்தத்தின் ஆரம்பமாகவும் இருக்குமாயின், அதைவிடபெரிய மகிழ்ச்சி அந்த இரு நாட்டு மக்களுக்குமட்டுமன்றி, ஆசியாவின் அமைதியில் உண்மையில் அக்கறை கொண்ட அனைவருக்குமிருக்கும். நல்லெண்ணத்துடன் நேரில் கலந்து பேசுவதாயின் எந்தப் பிரச்னையையும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியுமென்பதற்கு கட்ச் சமரசம் ஓர் எடுத்துக்காட்டு. யுத்தத்தால் எந்தப் பிரச்னையையும் தீர்க்கமுடியாது. இதற்கு மாறாக புதிய சிக்கல்களே ஏற்படுவதாக இருக்கும். இந்த உண்மை அனுபவமும் விவேகமுமுள்ள இருதேசத்தலைவர்களுக்கும் தெரியுமாதலால், மற்ற பிரச்னைகளையும் இவ்விதமே விட்டுக்கொடுத்து சுமுகமாகத் தீர்த்துக்கொண்டு, சமாதானத்தை நிலைநாட்டுவரென்றே நம்புகிறோம். இதற்குப் பிரிட்டிஷ் பிரதமரின் மேலான உதவி இருக்கிறதென்பது இந்த நம்பிக்கையைப் பலப்படுத்துவதாகவுள்ளது.

9 பேர்களுக்கு ஒருவர் வீதம் பலி

பெர்லின், ஜூன் 30

யூகோஸ்லாவிய மக்களில் 9 பேர்களுக்கு ஒருவர் வீதம் ஹிட்லரின் பாஸிசப் படைகளை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் உயிர் இழந்தனர் என்று யூகோ ஜனாதிபதி டிட்டோ இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"இரு ஜெர்மன் அரசுகள் உண்டு என்ற அடிப்படையை ஏற்றுக் கொண்டாலே ஜெர்மன் பிரச்னையை தீர்க்க முடியும், ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் பிரச்னையை ஜெர்மன் மக்களே தீர்த்துக் கொள்ள வேண்டும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு கிழக்கு ஐரோப்பாவில் சமாதானத்தின் ஒரு சின்னமாகும், உடனிருந்து வாழ்வதும் சமாதானக் கொள்கையுமே யுத்தத்திற்கு மாற்று மருந்து" என்று ஜனாதிபதி டிட்டோ மேலும் கூறினார்.

விலைக்கட்டுப்பாடு

கொழும்பு புதன்

பாவனையாளர்களின் பொருட்களை விரைவில்கட்டுப்பாட்டு விலைக்குக் கொண்டுவர மந்திரிகளைக் கொண்ட விலைவாசிகள் உபகமிட்டி தீர்மானித்துள்ளது.

சிமெந்து, கட்டடத்திற்குத் தேவையான இரும்பு, உருக்கு, டயர், ரியூப், பட்டரிகள், பிளேட், பால் உணவுகள் ஆகிய பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்குக் கொண்டு வரப்படும்.

சாப்புச் சட்டம் அமுல்நடத்த வவுனியா நகரசபை முடிவு

வவுனியா, புதன்

வவுனியா நகரசபையின் கூட்டம் நகரசபை மண்டபத்தில் நகரசபைத் தலைவர் திரு ம. பொன்னையா தலைமையில் கூடியபொழுது வவுனியா நகரசபை எல்லைக்குள் இருக்கும் வியாபாரஸ்தாபனங்கள் அனைத்திலும் சாப்புச் சட்டம் அமுல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

வவுனியாவைச்சுற்றி 3 மைல் தூரமுள்ள இடங்களுக்கு நகர பஸ் சேவையை விஸ்தரித்தால் பாடசாலைப் பிள்ளைகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும், விவசாயிகளுக்கும் நன்மையுண்டு என்றும் இதுசம்பந்தமாக இ. போ. சபையுடன் தொடர்பு கொள்வதெனவும் கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது.

இப்பகுதிகளிலுள்ள இ. போ. ச. பஸ்களில் சிங்களத்தில் போட் பலகைகள் இருப்பதால் தமிழ் மக்களுக்கு பெரும் சங்கடமாக இருப்பதாகவும் இதனை நிவர்த்தி செய்வதற்கு ஏற்ற வழிவகைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் சில அங்கத்தவர்கள் தெரிவித்த அபிப்பிராயம் பற்றி சபையில் ஆலோசிக்கப்பட்டது.

'இரத்தத்தட்டுப்பாட்டை நீக்க மக்கள் முன்வரவேண்டும்'

சாவகச்சேரி, புதன்

"யாழ்ப்பாண இரத்த வங்கியில் நிலவுகின்ற இரத்தத் தட்டுப்பாட்டைப்போல இலங்கையின் வேறு எந்தப்பகுதியிலும் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை, இந்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய தமிழ்மக்கள் முன்வரவேண்டும். இரத்ததானம் செய்ய முன் வருபவர்களுக்கு உற்சாகம் அளிக்கவேண்டியது தாய்மார்களுடைய கடமை" என்று சாவகச்சேரி எம். பி. திரு வி. என் நவரத்தினம் மட்டுவில் தெற்கு வேரக்கேணி வாசிகசாலையில் நடைபெற்ற மக்கள் சுகாதாரவாரக்கொண்டாட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டத்திற்கு வியாபாரதுரந்தர் திரு. எஸ். கந்தசாமி தலைமைதாங்கினார்.

அவர் தமது தலைமையுரையில் "இன்றைய சமுதாயத்தினர் சுகாதாரமுறைப்படி ஒழுகினால்தான் வருங்கால சமுதாய மக்கள் சிறந்த தேகாரோக்கியம் உள்ளவர்களாக வாழமுடியும்" என்றார்.

தென்மராட்சிப்பகுதி காரியாதிகாரி திரு இ. சிதம்பரப்பிள்ளை பேசுகையில் "வருடம் ஒருமுறை மாத்திரம் இத்தகைய விழாக்களை நாம் கொண்டாடினால் போதாது என்றும் பேச்சோடுமாத்திரம் நின்றுவிடாது போதனைகளைச் சாதனைகளாக்கவேண்டும் என்றும் கூறினார்.

சாவகச்சேரி கிராமசபைத் தலைவர் திரு. ஏ. சுப்பிரமணியம் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினர்.

காரியாதிகாரிக்குப் பாராட்டு

பருத்தித்துறை, புதன்

வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரியாக கடந்த ஐந்து ஆண்டுக்கு மேலாகக் கடமையாற்றி திருமலைக்கு மாற்றலாகிச் செல்லும் திரு ஜே. தர்மராசா ஆர்னல்டின் சேவையைப் பாராட்டுமுகமாக பருத்தித்துறைப் பொதுமக்கள் சித்திவிநாயகர் பாடசாலை மண்டபத்தில் பிரிவுபசாரவிழாவொன்றை நடாத்தினர்.

மருதடி வயிரவர் கோவிலிலிருந்து திரு. ஆர்னல்ட் ஊர்வலமாக கூட்டமண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

விழாவிற்கு நகரசபை முதல்வர் திரு. க. நடராசா தலைமை வகித்துப் பேசுகையில் மக்கள் மத்தியில் தனது சேவைகள் மூலமாகப் பெருமதிப்பைத் தேடிக் கொண்ட காரியாதிகாரி சூறாவளி, பேய்க்காற்று ஆகிய இரண்டினாலும் இப்பகுதி மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்ட போது அவர் ஆற்றிய சேவைகள் மக்களால் மறக்க முடியாதவையாகும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் பேசுகையில், காட்சிக்கெளியவனாய் கடும் சொல்லன் அல்லனாய எவரும் நேரில் சென்று உதவி பெறக்கூடிய கனிந்த உள்ளமும் பண்பும் அவரிடம் நிறைய விருந்தது என்றார்.

திருவாளர்கள் வித்துவான் வேலன், முடிக்குரிய வழக்கறிஞர் திரு. க. இரத்தினசிங்கம், வழக்கறிஞர் ம. வேலும்மயிலும், ஆசிரியர் பொ. செல்லையா, எம். அற்புதநாதன் முதலானோர் அன்னாரின் சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

திரு. ஆர்னல்ட் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

ஊர்வலத்தின்போது திரு குணரத்தினம் தங்க மாலையொன்றையும்விழாவின்போது திரு. க. கணபதிப்பிள்ளை மோதிரம் ஒன்றையுமணிந்து கௌரவித்தனர்.

ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன்

வரணி, சேவகிப்பிட்டி ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 2-ந் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகின்றது, தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு விழா நடைபெறும்.

11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத் திருவிழாவும் 12-ந் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

* * *

யாழ்ப்பாணம், வியாழன்

கருவில ஐயனார் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது, தொடர்ந்து பத்து நாட்களுக்கு விழா நடைபெறும், பத்தாம் நாள் ஐயனாருக்கு திருக்கல்யாணம் நடைபெறும். கருவில் சோ. நடராஜக்குருக்கள் பிரதம குருவாக இருந்து விழாவை நடத்திவைப்பார்.

குருபூசைவிழா

யாழ்ப்பாணம், புதன்

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்பாள்சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி கோவிலில், ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைவிழா ஜூலை மாதம் 8-ம் திகதி காலை ஆரம்பமாகும்.

அமெரிக்க உதவி ஆகஸ்டில் கிடைக்கும்

பம்பலப்பிட்டி, புதன்

அமெரிக்க உதவி மீண்டும் இலங்கைக்கு விரைவில் கிடைக்கவிருக்கிறது.

இந்த உதவி இவ்வருடம் ஆகஸ்டில் கிடைக்குமென நம்பப்படுகிறது. இதைத் தொடர்ந்து தனிப்பட்ட அமெரிக்க ஸ்தாபனங்களும் இங்கு முதலீடு செய்யுமென்றும், அரசாங்கம் வெளிநாட்டு முதலீடு சம்பந்தமாகத் தெளிவாக வெளியிட்ட பின்னரே இந்த ஸ்தாபனங்கள் இங்கு முதலீடு செய்யுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி ஏஜென்ஸியின் பிரதிநிதி டாக்டர் டி. மாக் இலங்கைக்குத் தேவையான உதவி பற்றி இந்த வாரத்தில் அல்லது அடுத்தவார முற்பகுதியில் அமெரிக்க அரசாங்கத்துக்கு அறிவிப்பாரென்று அரசாங்க உயர்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐயாறன்

எழுதுவது

மன்னாரிலே ஒரு குடும்பத் தலைவரைக் 'கள்ளத்தோணி' யென்று சொல்லி, திடீரெனப் பிடித்துக் கொண்டு போய் அடைத்துவிட்டார்களாம். பல குழந்தைகளுடன் தவிக்கும் தாய் பலரிடம் முறையிட்டார். அங்குள்ள ஒரு சமயகுருவிடம் சொன்னால் அவர் உதவி செய்யலாமென்று அறிந்து அவரிடம் சென்று முறையிட்டாராம்.

அவர் என்ன சொன்னார் தெரியுமா? குடும்பத்துடன் மதம் மாறுவதாயிருந்தால், தாம் தலையிட்டு வேண்டிய உதவி செய்யலாமென்று கூறியதாயும், இந் நிபந்தனைக்கு உட்பட மறுத்து அந்தஏழைத் தாய் வேறு முயற்சியைச் செய்ததாயும் காரைநகரில் நடந்த ஒரு கூட்டத்தில் பொறுப்புள்ள ஒரு எம். பி. மிக மனவேதனையுடன் கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டேன். மத மாற்றத்துக்கு இந்தக் 'கள்ளத்தோணி' கெடுபிடிகளும் பயன்படுத்தப்படுவது உண்மைதானா? அட கடவுளே! ஒருபக்கம் சமய சமரச உறவின் அவசியத்தைப்பற்றிப் பேசிக் கொண்டு மறுபக்கம் இவ்வித முறைகளில் மத மாற்ற முயற்சிகள் நடப்பதாயின், விரும்பத்தக்க சமயசமரசமோ, நல்லுறவோ எப்படி ஏற்பட முடியும்?

* * *

இலங்கை மந்திரிசபைக்குள்ளாக பலபல புதிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளனவாம். சில அமைச்சர்கள் தமிழர்பால் பழைய மனப்பான்மையை மாற்றிக் கொள்ள விரும்பாததால், சிக்கல் அதிகரித்துள்ளதாயும் பிரதமர் டட்லிக்கு இதனால் அதிக கவலை ஏற்பட்டு வருவதாகவும் விஷயமறிந்தவர்கள்மூலம் அறியவந்தேன். பிரதமருக்குச் சுகவீனம் ஏற்பட்டிருப்பதற்கும் இதுதான் காரணமோ தெரியவில்லை.

சிறப்பாகக் கல்வி அமைச்சரின் மனப்பான்மை உதவி அளிப்பதாயில்லை என்றும் இதனால் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுகையில் தமிழ் எம். பிக்களில் பலர் பார்லிமெண்டில் அத்தீர்மானத்தை ஆதரிக்காவிட்டாலும் அவரது போக்கைப்பற்றி சபையில் பகிரங்கமாகக் குறைகூற வேண்டியிருக்கலாமென்றும் அறியவந்தேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தையோ அல்லது "காம்பஸை"யோ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி இருக்குமிடத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு யோசனை இருப்பதாயும் இதில் தமிழ்அமைச்சர் விசேஷ சிரத்தை காட்டுவதாகவும்ஒருதமிழ் தினசரியில் செய்தி வெளியாயிற்று. ராமநாதன் பல்கலைக்கழகம், அல்லது 'காம்பஸ்' யோசனை கைவிடப்பட்டுவிட்டதா என்று ஓரன்பர் கவலை தெரிவித்தார். சென்னையிலுள்ளது போல பல கல்லூரிகளையும் சர்வகலாசாலையுடன் இணைக்கும் முறை இங்கு அமுலுக்கு வர வேண்டுமென்ற யோசனை கூறப்படுகிறதாம். என்ன நடக்கிறதோ பார்க்கலாம்.

* * *

எத்திக்குமாய் நின்ற இறைவன் தன்னை ஏகம்பம்
மேயானை இல்லாத் தெய்வம்,
பொத்தித்தம் மயிர் பறிக்குஞ்
சமணர் பொய்யிற் புக்கழுந்தி
வீழாமே போத வாங்கிப், பத்திக்கே வழிகாட்டிப் பாவந்
தீர்த்துப் பண்டைவினைப்பயமான எல்லாம் போக்கித்,
தித்தித்தென் மனத்துள்ளே
ஊறுந்தேனைச் செங்காட்டங்
குடியதனிற் கண்டேன் நானே.

— அப்பர்சுவாமிகள்

வியட்நாம்

சண்டையில் ஆஸ்திரேலிய துருப்புகளின் முதல்பிரவேசம்

8000 வியட்காங்கியர் மீது நடவடிக்கைகள் ஆரம்பம்

சைகோன், ஜூன் 30

தென்வியட்நாம் சண்டையில் முதல் தடவையாக இன்று ஆஸ்திரேலியத் துருப்புக்கள் நடவடிக்கையில் இறங்கின. அமெரிக்க பாரசூட் துருப்புக்களுக்கும், 500 ஆஸ்திரேலியத் துருப்புகளுக்கும் தென் வியட்நாம் துருப்புகளுக்கும் கூட்டாக வியட்காங்கியர் நிலை கொண்டிருக்கும் பகுதியில் நடவடிக்கைகளை ஆரம்பித்தன.

இப்பகுதியில் 8000 வியட்காங்கியர் இருப்பதாகக் கூறப்படுகிறது. கூட்டுப்படைகள் 180 ஹெலிகோப்டர் விமானங்களை உபயோகித்தன.

முதல் நடவடிக்கையில் 20 வியட்காங் துருப்புக்கள் கொல்லப்பட்டன.

அதேசமயம் அமெரிக்கவிமானங்கள் வடவியட்நாமின் ஹானோயிலிருந்து 240 கிலோமீட்டர் தூரத்தில் தாக்குதல்கள் நடத்தின.

வியட்காங்கியரும் நேற்று தென்வியட்நாமில் விரிவான தாக்குதல்களை நடத்தினர்.

உலக மக்களை ஏமாற்றவே அமெரிக்கா சமாதானம் பற்றிப் பேசுகிறதென்று சோவியத் பிரதமர் கோஸிஜின் கூறினார்.

வியட்நாமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் விலக வேண்டும் என்றும் வடவியட்நாம் மீது குண்டுவீச்சை நிறுத்த வேண்டும் என்றும் கோஸிஜின் மேலும் கூறினார்.

ஆசிய-ஆபிரிக்க மகாநாடு ஒத்திவைப்புக்கு சீனு வரவேற்பு

வெளிநாட்டு மந்திரி பெருமிதம்

பீகிங், ஜூன் 29

ஆசிய-ஆபிரிக்க உச்சி மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது ஏகாதிபத்தியவாதிகள் பிற்போக்குவாதிகள் ஆகியோர்மீது கொண்ட மாபெரும் வெற்றியென சீனப் பத்திரிகையாளரும், வெளிநாட்டு மந்திரி சென்-யீயும் கூறியிருக்கின்றனர்.

மகாநாடு ஒத்திவைக்கப்படக்கூடாதென்றும், திட்டமிட்டபடியே நடத்தப்பட வேண்டுமென்றும் வற்புறுத்திய நாடுகளில் சீனு பிரதான பாகம் வகித்ததென்பது குறிப்பிடத்தக்கது. எனினும் சீனுவுக்கு இவ்விஷயத்தில் ஏற்பட்ட தோல்வியை மறைக்கு முகமாகவே இவ்வித கருத்துகள் வெளியிடப்படுவதாகக் கருதப்படுகிறது. மகாநாடு ஒத்திவைக்கப்பட்டதைச் சீன மக்கள் வரவேற்கிறார்கள் என்றும் சீன அறிக்கைகள் கூறுகின்றன.

காமன்வெல்த் அமைதி குழுவுக்கு வில்சன் தலைமைவகிக்க கூடாது

கென்யா வெளிமந்திரி கருத்து

நைரோபி, ஜூன் 30

லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாடு ரொடீஷியாவில் பெரும்பான்மை ஆட்சியை கொள்கையளவில் அங்கீகரித்திருப்பது மகிழ்ச்சியை அளிப்பதாக கென்யா வெளிநாட்டு மந்திரி கூறினார்.

வியட்நாம் பற்றி திரு. வில்சன் பல சந்தர்ப்பங்களில் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாய் காமன்வெல்த் அமைதிக்குழுவுக்கு அவர் தலைமைவகிப்பது நல்லதல்ல என்றும் அவர் கூறினார்.

எனவே இந்த நிலையில் காமன்வெல்த் அமைதிக்குழுவில் நடுநிலைமை நாடுகளே அங்கம்வகிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

சமாதானக்குழு பற்றி வில்சன

லண்டன், ஜூன் 30

மாஸ்கோவும், பீகிங்கும் காமன்வெல்த் சமாதானக் கோஷ்டியை பகிஷ்கரித்த போதிலும், சமாதானக்குழு வியட்நாமில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் குறிப்பிட்டார்.

சூழ்நிலை தெளிவாகும் தருணத்தில் சமாதானயாத்திரையை அது தொடங்கும் என்றும் அவர் கூறினார்.

விமான தலைவருக்கு விருந்து

புதுடில்லி, ஜூன் 30

இந்திய விமானப்படைத் தலைவர் ஏர்மார்ஷல் அர்ஜூன் சிங், இங்கு விஜயம்செய்திருக்கும் டர்க்கிய விமானத் தலைவருக்கு விருந்தளித்துக் கௌரவித்தார்.

தமிழ்நாடும் 4-ம் திட்டமும்

புதுடில்லி, ஜூன் 30

தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கும், திட்டக்கமிஷன் பிரதிநிதிகளுக்குமிடையே நேற்று 4-ம் திட்ட ஒதுக்கீடு சம்பந்தமாக டில்லியில் பேச்சுக்கள் ஆரம்பமாகின. தமிழ்நாட்டுக்கு ரூ. 750 கோடி ஒதுக்குவதென அப்போது முடிவு செய்யப்பட்டதாய்த் தெரிகிறது.

விமானத்தை திருப்பித்தருக

புதுடில்லி, ஜூன் 30

சமீபத்தில் பயிற்சியிலீடுபட்டிருந்தபோது பாகிஸ்தானுக்குள் புகுந்த விமானத்தையும், விமானியையும் திருப்பித்தருமாறு இந்தியா கேட்டிருக்கிறது.

இந்த விமானத்தை பாகிஸ்தான் இப்போது பிடித்து வைத்திருக்கிறது. விமானியை இந்தியப் பிரதிநிதி ஒருவர் சந்திக்க அனுமதி தருமாறு பாகிஸ்தானிடம் கேட்கப்பட்டது.

ஆனால் இது சம்பந்தமான விசாரணை முடிவடையும் வரை விமானியைச் சந்திக்க அனுமதிக்க முடியாது என பாகிஸ்தான் தெரிவித்திருக்கிறது.

கோஸிஜின் ராவ் சந்திப்பு

மாஸ்கோ, ஜூன் 30

இந்திய பாசன, மின்சார மந்திரி திரு. கே. எல். ராவ் சோவியத் பிரதமர் திரு. கோஸிஜினைச் சந்தித்தார். 4-ம் திட்டத்துக்கு ரஷ்ய உதவி பற்றி அவர்கள் விவாதித்ததாய்த் தெரிகிறது.

புதிய ரயில் பாதை

பெங்களூர், ஜூன் 30

பங்களூரிலிருந்து 159 கிலோமீட்டர் தூரத்துக்கு புதிய ரயில்பாதை அமைக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகின. இதற்கு 28 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவாகும்.

மாஜிஸ்டிரேட்டுக்கு கிளான் பயமுறுத்தல்

லண்டன், ஜூன் 30

லண்டனிலுள்ள ஒரு பெண் மாஜிஸ்டிரேட்டின் வீட்டைச் சுற்றிப் போலீஸார் காவல் நின்றனர்.

ஸ்ரீமதி அன்னே நவீன்ஸ் என்ற 37 வயதான அவர் சமீபத்தில் தெரிவித்த கருத்தை எதிர்த்து கு கிளக்ஸ் கிளான் வெறியர்கள் பயமுறுத்தல் விடுத்ததே இதற்குக் காரணம்.

பிரிட்டன் கறுப்பு நிறத்தவர்களையும் போலீஸ்காரர்களாக வைத்திருக்க வேண்டும் என சமீபத்தில் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்தப் பெண் மாஜிஸ்டிரேட் விரைவில் கொல்லப்படுவார் என்றும் துண்டுதுண்டாகக் கிழித்து தோலுரிக்கப்படுவார் என்றும் கு கிளக்ஸ் கிளான் அங்கத்தினர் ஒருவர் இவருக்கு டெலிபோனில் கூறினார்.

போர்னியோவில் இந்திய சினிமாவுக்கு தடை

ஜாகர்த்தா, ஜூன் 30

இந்தோனேஷிய போர்னியோவிலுள்ள சினிமா சொந்தக்காரர்கள் இந்தியத்திரைப்படங்களைக் காட்டுவதை நிறுத்த முடிவு செய்திருக்கிறார்கள். இந்தோனேஷியாவுக்கெதிரான அரசியல் நடவடிக்கைகளில் இந்தியா சமீபத்தில் இறங்கியிருப்பதே இதற்குக் காரணம் என அண்டாரா செய்தி ஸ்தாபனம் கூறியது.

"பாரத—பாக் யுத்தம் கூடாது"

—அயூப்

ராவல்பிண்டி, ஜூனை 30

பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே யுத்தம் ஏற்படுவது சாத்தியமில்லை என்றும், அதனால் கஷ்டமே ஏற்படும் என்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் கூறினார்.

காமராஜரின் சவாலை அண்ணதுரை ஏற்றார்

மும்மொழித் திட்டத்தின் பேரில் போட்டியிட தயார்

சென்னை, ஜூன் 30

மும்மொழித் திட்டத்தை வைத்து 1967-ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிடுமாறு காங்கிரஸ் மகாநாட்டில் திரு. காமராஜ் விடுத்த சவாலை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு சி. என். அண்ணதுரை ஏற்றுக்கொண்டார். இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

திரு. அண்ணதுரை மேலும் கூறியதாவது: திரு. காமராஜின் சவாலை ஏற்றுக்கொண்டு அடுத்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியை முறியடிப்பதற்கு மாணவர்கள் எல்லோரும் தயாராகவேண்டும். இந்த மும்மொழித் திட்டம் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்குமாதலால் இத்திட்டத்துக்கு எதிராக மாணவர்களும் பெற்றோர்களும் உழைக்க முன்வரவேண்டும்.

போராட்டத்தில் செலவு செய்யும் உற்சாகத்தை பொதுத்தேர்தலுக்குச் செலவு செய்வதனால் பயனுண்டு. அடுத்த பொதுத்தேர்தல்வரை எந்தப் போராட்டமும் நடைபெறாது. பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியை முறியடிப்பதுதான் இனிமேல் நமது முக்கியவேலை. இதற்கு எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பும் முக்கியமானது ——

சமாதானத்துக்கு உறுதியான திட்டம்

பெர்லின், ஜூன் 30

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஜனதிபதி உல்பிரிச், ஹேல் என்னுமிடத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், ஐரோப்பிய சமாதானத்திற்கு ஓர் உறுதியான திட்டம் வேண்டும் என்று கூறினார். இக்கூட்டத்தில் யூகோ ஜனதிபதி மார்ஷல் டிட்டோவும் பேசினார். பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி விவாதிப்பதற்கு ஐரோப்பிய நாடுகளின் மகாநாடு ஒன்று கூடவேண்டுமென்று ஜனதிபதி யோசனை கூறினார்.

ஐரோப்பாவில் அணு ஆயுதங்களை உபயோகிக்க முடியாத ஒரு சுதந்திரப் பிரதேசத்தை ஏற்படுத்தல், தற்போதைய தேச எல்லைகளை அங்கீகரித்தல், நேட்டோ நாடுகளுக்கும் வார்சோ நாடுகளுக்குமிடையே அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்தல், இரு ஜெர்மன் நாடுகள் இடையே சமாதான உடன்படிக்கை செய்தல் முதலிய விஷயங்கள் அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டுமென ஜனதிபதி உல்பிரிச் தெரிவித்தார்.

கியூபாவுக்கு சிமெந்து தொழிற்சாலை

ஹவானா, ஜூன் 30

கியூபாவிலே மிகப்பெரிய சிமெந்துத் தொழிற்சாலை ஒன்றினை அமைப்பதற்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலிருந்து இங்கு வந்துள்ள நிபுணர்கள் பெரிதும் உதவிசெய்கின்றனர். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் இயந்திரங்களைக் கொண்டுள்ள இந்தத் தொழிற்சாலை வருடந்தோறும் 60,000 டன் சிமெந்தை உற்பத்தி செய்யும்.

சீனுவுக்கு மின்சார ரயில்

பீகிங், ஜூன் 30

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு 180 "ஐஸ்"வான் வண்டியூர், மின்சார ரயில் என்ஜின்களையும் சீனுவுக்கு ஏற்றுமதி செய்யவிருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு வர்த்தக ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் இங்கு கையெழுத்திட்டன.



கடந்த 3-ந் திகதி "ஜெமினி 4" வான்வெளிக் கப்பலை எய்த "டிட்டான் 2" உந்து ராக்கெட்டை இங்கே காணலாம். கேப்கென்னடியிலிருந்து அனுப்பப்பட்ட இந்த வான்வெளிக் கப்பலின் பிரயாணிகளான மெக்டிவிட்டும், வைட்டும் 6 நிமிஷத்திற்குப் பின் அயனவெளியில் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டனர். அட்லாண்டிக் சமுத்திரத்தில் இறங்குமுன் இக்கப்பல் 62 தடவை பூமியை வலம்வந்தது.

எவ்வாறு அனுப்புவது?

பம்பலப்பிட்டி, புதன்

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை எவ்வாறு இந்தியாவிற்கு அனுப்பலாமென்று குடியேற்ற வெளியேற்ற அதிகாரிகள் பரிசீலனை செய்து வருவதாகத் தெரியவருகிறது. விமானமூலமாகவும், தூத்துக்குடி கப்பல் சேவைமூலமாக கட்டுமை வள்ளங்கள் மூலமாகவும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை அனுப்பலாமென அதிகாரிகள் கருதுகின்றனர்.

முன்னர் தனுஷ்கோடி ஊடாகவே இவர்கள் அனுப்பப்பட்டுவந்தார்கள் சூறாவளிக்குப் பின்னர் தனுஷ்கோடிப் பாதை இன்னமும் சீரடையவில்லை.

குடிநீர் கஷ்டம் தீரும்

யாழ்ப்பாணம், புதன்

புங்குடுதீவு. கிழக்கு மேற்கு பகுதிகளுக்கும். தோப்புக்காடு எழுவை தீவு ஆகிய பகுதிகளுக்கும் அடுத்த வாரம் முதல் குடிநீர் வழங்க சமூகசேவைப் பகுதியினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

குடிநீரை அப்பகுதிகளுக்கு கொண்டு செல்லும் பொறுப்பையும் சமூகசேவைப் பகுதியினர் ஏற்றுள்ளனர். இப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு அரசாங்க அதிபர் விண்ணப்பங்கள் கோரியுள்ளார்.

இப்பகுதிகளுக்கு குடிநீர் செப்டம்பர் மாதம்வரை வழங்கப்படுமென தெரியவருகிறது

REGAL - JAFFNA
NOW SHOWING
Jeff Chandler
in
THE
PLUNDERERS
(ADULTS ONLY)

கி. மு. சங்க புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை கிராமமுன்னேற்றச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சங்க மண்டபத்தில் தீவுப்பகுதி கிராமவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆர் நடேசன் தலைமையில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் காலஞ்சென்ற சங்கத் தலைவர் திரு. மூத்ததம்பி மருதைநயினாரின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. ஆண்டு அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாக தெரிவிசெய்யப்பட்டனர்.

தலைவர்– திரு ஏ. மார்க்கண்டு (கி. ச. அங்கத்தவர்) உபதலைவர்– திரு. மு. திருநாவுக்கரசு, கௌரவ காரியதரிசி– திரு வி. சுப்பிரமணியம், உதவிக்காரியதரிசி திரு இ. நகுலேசபிள்ளை (கி. ச அங்கத்தவர்,) தனாதிகாரி–திரு. கா. தம்பிஐயா.

நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இளையதம்பி இல்லத்துக்கு முதலிடம்

சுழிபுரம், புதன்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இல்லங்களின் விளையாட்டுப் போட்டி சென்றவாரம் நடைபெற்றது. பதினான்கு வருடங்களாக பெறமுடியாத முதலிடத்தை இளையதம்பி இல்லத்தினர் இவ்வாண்டு பெற்றுள்ளனர். முதலிடம் பெற்றதை பாராட்டி இளையதம்பி இல்ல மாணவர்கள் கல்லூரி ஆசிரியர்களுக்கு தேநீர் விருந்து அளித்து புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். இளையதம்பி இல்லத்தினரின் திறமையை பாராட்டி கல்லூரி அதிபர் உட்பட மற்றும்பலர் பேசினர்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த

லவகுசா
(முழுநீள கலர்ப்படம்)
உலகம் போற்றிப் புகழும் இராமாயண காவியத்தின்
தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

யாழ்ப்பாணத்தில்

சுகாதார இயக்கம் நல்லசேவைசெய்கிறது

யாழ்ப்பாணம், புதன்

'இலங்கையில் சுகாதாரவாரவிழா கொண்டாட ஆரம்பித்த நாள்முதல் யாழ்ப்பாணமும் இவ்விழாவை கொண்டாடி வருகிறது. யாழ்ப்பாணம், மூன்றுதடவை தொடர்ந்து சுகாதார கேடயத்தை பரிசாகபெற்றுள்ளது இதுயாழ்ப்பாண மக்களிடையே சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதென்பதை காட்டுகிறது.'

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற சுகாதாரவாரத்தின் இறுதி நிகழ்ச்சிகளின்போது பேசிய டாக்டர் சிவஞானசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: அரியாலை, நாவாந்துறை, குருநகர் சனசமூக நிலையங்கள் மட்டுமன்றி பெரும்பான்மையான பாடசாலைகள் சுகாதாரவிழாவில் பங்கெடுத்துக் கொண்டன. இதிலிருந்து சுகாதார இயக்கம் நல்ல சேவைசெய்து வருகிறதென்பதை அறிய முடிகிறது.

யாழ்ப்பாண மாநகரசபை மேயர் திரு எஸ். வி. மகாதேவா பேசும்போது, யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர்கள் சுகாதார வசதிகளோடு இருக்கவேண்டியதன் அவசியம் பற்றியும், சுகாதாரவாரவிழாவின் முக்கியத்துவம் பற்றியும் கூறினார்.

டாக்டர் சிவசோதி பேசும்போது, சுகாதாரவிழா ஆரோக்கியமாக மக்கள் வாழவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே கொண்டாடப்படுகிறதென்றும், சுகாதார விதிகளை கற்றோர் கடைப்பிடித்தால்தான் மற்றவர்களும் அவர்களைப் பின்பற்றுவார்களென்றும், வீடுகளில் பெற்றோர் சுகாதார விதிகளை கடைப்பிடித்தால் பிள்ளைகளுக்கு உதவியாக இருக்குமென்றும் கூறினார்.

டாக்டர் பசுபதி, எஸ். ஆறுமுகம் ஆகியோரும் பேசினார்கள்.

பாடசாலைகள், சனசமூக நிலையங்களின் போட்டிகள் நடைபெற்றன. வெற்றிபெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:-

சிறந்த போசனசாலை
மலாயாகபே, கிருஷ்ணபவான், சுபாஸ் கபே, தாமோதரவிலாஸ்.

சிறந்த தேநீர்சாலை
மில்க்பார். எம்.எம்.ஜுனட், எம் குமாரசாமி

சிறந்த ஐஸ்கிறீம்
சுபாஸ் கபே, டில்கா.

சிறந்த ஹோட்டல்
சுபாஸ விடுதிவீடு, கிராண்ட் ஹோட்டல்

சிறந்த பேக்கரி
சிற்றி பேக்கரி, கிரவுன்.

ஆரோக்கிய குழந்தைகள்
ஜுலைகமன் சமீது, ஜோன்சன் அருளப்பு' யோகராசா செல்லையா. உதயகுமார் துரைசிங்கம்.

சனசமூக நிலையம்
நாவாந்துறை சனசமூக நிலையம்,

பிரசவ விடுதி
ஜுபிலி சுகாதார நிலையம், அரியாலை பிரசவ விடுதி, நெடுங்குளம் பிரசவவிடுதி, வண்ணார்பண்ணை பிரசவ விடுதி

பாடசாலை செல்லாத ஆரோக்கிய சிறுவர்
ஸ்ரீகுமார் தம்பிராசா, மாலதி தியாகராசா, ரவீந்திரன் சுப்பையா.

பாடசாலை
கொட்டடி நமசிவாய வித்தியாசாலை.

பேச்சுப்போட்டி
க. மரியதாஸ், பாலசுப்பிரமணியம், ஜீவியஅம்மா, சே. சரோஜினி.

சுவரொட்டி போட்டி
ஆர். பாலசுந்தரராசா, கே. ஜெயரத்தினம், ஏ. அருளானந்தம்.

மந்துவில் இரட்டைக் கொலை வழக்குசுப்ரீம்கோர்ட்டுக்குப்பாரம்

சாவகச்சேரி, புதன்

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மந்துவில் இரட்டைக் கொலை வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. பி. ஜெராபர்ட் சில்வா, விசாரணைகளின் பின்னர் வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்குத் தாக்கல் செய்து எதிரிகள் இருவரையும் சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் மந்துவிலில் கே. சுப்பிரமணியம், கே. சித்திரன் இருவரையும் கொலை செய்ததாகவும், கே. கிட்டினன் என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாகவும் கதிரன் நாகமுத்து, சின்னையா நவரத்தினம் ஆகிய இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திருவாளர்கள் வி. செல்லத்தம்பி, வி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. கே. வி எஸ். சண்முகநாதன் ஆஜரானார்.

அனலைதீவு வாலிபர் இயக்கம்

யாழ்ப்பாணம், புதன்

அனலைதீவுக் கிராமத்தின் சமூக பொருளாதார விருத்திக்காக உழைக்கும் நோக்குடன் "அனலைதீவு வாலிபர் இயக்கம் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் தலைவராக திரு. ஐ சபாபதிப்பிள்ளையும், பொதுச்செயலாளராக திரு. வ. கணேசனும் பொருளாளராக சு. மகாலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர். வேறு எண்மரும் செயற்குழுவில் இடம்பெற்றுள்ளனர். அதன் முதற்செயற்குழுக் கூட்டத்தில் இயக்க அமைப்பு விதிகள் அங்கீகரிக்கப்பட்டன. உள்ளூரிலும் வெளியூரிலும் வதியும் அனலைதீவு மக்கள் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைப்பு விதிகள் ஆக்கப்பட்டுள்ளன. கிராமத்தின் போக்குவரத்து சுகாதார கல்வி வசதிகளை முன்னேற்றுவதற்கான குறுகியகால வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரை இயக்கத்தின் காப்பாளராக இருக்கும்படி அமைப்பதெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

படித்த வாலிபர்களின் புதிய கிளை

யாழ்ப்பாணம், வியா.

"படித்துப் பட்டம்பெற்ற இளைஞர்களால் தான் ஒரு நாட்டை முன்னேற்ற முடியும் அந்நாட்டின் உயர்வும் தாழ்வும் அவர்கள் கையில் தான் தங்கியிருக்கிறது" என்று பூநகரி கிராமச்சங்கத் தலைவர் திரு. சி செல்லத்துரை படித்த இளைஞர் முன்னேற்றச் சங்க பூநகரி கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்

கிளையின் புதிய நிர்வாகிகள் வருமாறு:-

போஷகர்கள் திருவாளர்கள் செல்லத்துரை, கா. நடராசா, வே. கார்த்திகேசு தலைவர் திரு. கோ. சோமசுந்தரம். உபதலைவர் திரு. ஆர். கனகரத்தினம். செயலாளர் திரு. எஸ். ஜெயகாந்தன். பொருளாளர் திரு எஸ். செல்வரத்தினம். உபசெயலாளர் ச அருணாசலம் மற்றும் ஆறுபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

ஒலிபெருக்கி வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

ஒலிபெருக்கி வழக்கு நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஜெபார்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின், நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 65-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ந் திகதி கார் ஓடிக்கொண்டிருக்கும் போது, ஒலிபெருக்கி பாவித்ததாக, சாவகச்சேரியை சேர்ந்த சி. சிதம்பரம் என்பவர் மீது சாவகச்சேரி பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் ஏ. எஸ். பி. திரு. எம். சண்முகம், அவரது கார் சாரதி பண்டா ஆகியோர் சாட்சியமளித்தார்கள்.

எதிரி சார்பில் பாரிஸ்டர் எம். சிவானந்தன், புறக்டர் எஸ். பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிரிகள் விடுதலை

சாவகச்சேரி, புதன்

வி. யோகரத்தினம், சி. தம்பிராசா இருவரும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் அனுமதியின்றி ஆனையிறவு தடை தாண்டிக் கூடாக 113 மூடையில் சாட்அரிசியைக் கடத்திச் சென்றதாகக் குற்றம் சாட்டி சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. பி. ஜெபேர்ட் சில்வா முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் விசாரணைகளின் பின்னர் நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார். எதிரிகள் சார்பில் திரு. வி. செல்லத்தம்பியின் உதவியுடன் வழக்கறிஞர் மு. சிவசிதம்பரம் ஆஜரானார்.

நகைகள் திருட்டு

சாவகச்சேரி, புதன்

மிருசுவில்கிராமசபைத் தலைவர் திரு. ஆறுமுகம் சின்னத்துரை என்பவரின் வீட்டில் 1000 ரூபா பெறுமதியான தங்கநகைகள் திருட்டுப் போனது சம்பந்தமாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிசார் வேலுப்பிள்ளை மகாலிங்கம் என்ற சிறுவனைச் சந்தேகத்தின் மீது கைதுசெய்துள்ளனர், திருட்டுப்போன நகைகளும் மீட்கப்பட்டன.

மீண்டும் திருடர்கள் நடமாட்டம்

பருத்தித்துறை, புதன்

சில மாத கால இடைவெளியின் பின்னர்மீண்டும் புலோலி துன்னாலை ஆகிய இடங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட முன்வந்துள்ளனர்.

நேற்றையதினம் ஒரு வீட்டில் இரு ஆடுகளும், தங்க நகைகளும் திருட்டுப்போனதாயும் பிறிதோர் வீட்டில் தங்கநகைகளும் புடவைகளும் பெட்டியுடன் திருடப்பட்டதாயும் கூறப்படுகிறது

திருட்டுப்போனதாகக் கருதப்பட்ட பழைய சேலைகளும்; உடைக்கப்பட்ட பெட்டியும் ஒரு பற்றை மறைவில் வீசப்பட்டிருந்ததாம்.

பொலிசார் இத் திருட்டுக்கள் சம்பந்தமாக புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

மாநகரசபைகள் ஆகும்

கொழும்பு, புதன்

இரத்தினபுரி, கம்பளை நகரசபைகள் விரைவில் மாநகரசபைகளாக்கப்படுமென ஸ்தலஸ்தாபன கமிஷனர் தெரிவித்தார்.

இரத்தினபுரி இவ்வருடம் மாநகரசபை அந்தஸ்த்துக்கு உயர்த்தப்படுமென்றும், கம்பளை அடுத்த வருடம் மாநகரசபையாக்கப்படுமென்றும் கூறினார்.

விளம்பரம்

கேள்வி விளம்பரம்

வாரந்தோறும் காவற்குழி, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ஆகிய இடங்களிற் கொள்வனவுசெய்யும் பொருட்களைப் பூநகரி ப. நோ. கூ. ச. சமாஜத்தில் ஒப்படைப்பதற்கு லொறிச் சொந்தக்காரரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன,

விபரங்கட்கு மேற்படி சமாஜக்காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்,

444 காரியதரிசி

வானொலி நிகழ்ச்சிகள்

வியாழன் 1-6-65

கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 பக்திப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-50 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 6-45 திரை இசை,

இரவு 6-15 கிராமசஞ்சிகை 6-45 இசைப்பாடம், 7-15 பாட்டு-சகுந்தலா சிவராசா, 7-45 தொடர் நாடகம்-லண்டன் கந்தையா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நேயர்விருப்பம், 10-00 பாட்டு.

நெடுந்தீவில்

பஸ் சேவை ஆரம்பம்

நாலரைமைலுக்கு 50 சதம்!

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவு மக்களால் பலகாலம் எதிர்பார்த்திருந்த பஸ் சேவை சென்ற சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. கடும் காற்றுக் காரணமாக பஸ் வண்டி யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு கொண்டுவர முடியாதநிலையில் இருந்தமை பஸ் சேவை குறிக்கப்பட்ட காலத்தில் ஆரம்பிக்க முடியாது போய்விட்டது.

ஒருகாலைக்கு நான்கு தட்வை பஸ் சேவையிலீடுபட்டுள்ளது. மாவிலித்துறைமுகத்திற்கும் குருக்கள் மடத்திற்குமிடையே உள்ள தூரம் நாலரை மைல் ஆகும். இத்தூரத்திற்கு 50 சதம் கட்டணமாக அறவிடப்படுவதால் மக்கள் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாகியுள்ளார்கள்.

பெரும்பான்மை மக்கள் வறியவர்களாக உள்ள இத்தீவில் ஒரு மைலுக்கு 10 சதவீதம் அறவிடப்படுவதால் பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் மிகமிகக் குறைவாகக் காணப்படுகிறார்கள். இலங்கையில் மிகவும் கூடுதலான கட்டணம் இதுதான் என மக்கள் கருதுகிறார்கள். ஒரு மைலுக்கு 5 சதவீதம் அறவிடப்படுமேயானால் பஸ் வண்டிக்கும் தினமும் கூடுதலான பணம் வருவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கயானாவுக்கு

சர்வதேச நீதி கமிஷன் கமிட்டி

ஜெனிவா, ஜூன் 30

பிரிட்டிஷ் கயானாவில் இனவேற்றுமை பற்றி ஆராயும் பொருட்டு சர்வதேச நீதிபரிபாலனக் கமிஷன் கமிட்டி ஒன்றை நியமித்திருக்கிறது.

‘ஆசிரியர்களின் இடமாற்றத்தால் கல்வித் தரம் குறைகிறது’

கோண்டாவில், செவ. பாடசாலைகளில் கற்பிக்கும் அதிபர்களையும், ஆசிரியர்களையும் அடிக்கடி மாற்றஞ்செய்வதினால் பாடசாலைகளின் கல்வித்தரம் மிகவும் வீழ்ச்சியடைவதுடன் கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் அறிவு வளர்ச்சியும் குறைவடைகிறது. கடந்த ஒன்றரை வருட காலமாக இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றும் அதிபரை திடீரென்று மாற்றுவதன் மூலம் இக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவமாணவிகளுக்கு கல்விப் பகுதி அதிகாரிகள் மிகவும் தீங்கிழைக்கிறார்கள். இந்தத் தீர்க்க மற்ற செயல்களினால் கல்வி உலகமே இன்று மோசமடைகிறது”

இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. க. செ. மகாதேவா பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இப்படியான விளையாட்டுப் போட்டிகள் மூலம் மாணவர்களிடையே ஒழுக்கத்தையும், சிறந்த நன்னடத்தைகளையும் ஏற்படுத்த முடியும். போட்டிகளில் வெற்றியடையத் தவறிய வீரர்களும் வீராங்கனைகளும் தோல்வியை ஒப்புக்கொள்ளப் பழகுவதின் மூலம் நாட்டில் சகிப்புத் தன்மையும் பொறுமையையும் அடையப் பழகிக் கொள்ளுகிறார்கள். இப்படியாக நன்மை தீமைகளை சரிசமனாக ஏற்றுக்கொள்வதின் மூலம் தம் சமுதாயத்தைக் கட்டி எழுப்புகிறார்கள் என்று கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. ஈ. பத்மநாதன் வரவேற்புப் பேசுகையில் ஓய்வு நேரத்தை மாணவர்கள் சிறந்த முறையில் பயன் படுத்துவதினால் சமூக முன்னேற்றம் ஏற்படுகிறது. பிள்ளைகளை விளையாட்டுத் துறையில் முன்னேற்ற பெற்றோர்களும் ஆசிரியர்களும் முயற்சி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

போட்டியில் 237 புள்ளிகளைப் பெற்ற சோமசுந்தரம் இல்லம் 1965-ம் ஆண்டுச் சம்பியன் விருதைப் பெற்றது.

திருமதி மகாதேவா வெற்றி பெற்றோருக்குக் கிண்ணங்களையும், விருதுகளையும் வழங்கினர்.

நெடுந்தீவு சுகாதாரவார விழா போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

சென்றவாரம் முழுதும் நெடுந்தீவில் உள்ள பாடசாலைகள் யாவும் மிகவும் திறமையான முறையில் கொண்டாடின. பாடசாலை நாட்களில் பாடசாலைகளில் சொற்பொழிவுகளும், சுத்திகரிப்புகளும் நடைபெற்றன. பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டி நெடுந்தீவு நடுக்குறிச்சியில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது.

வெற்றிபெற்றோரின் விபரம் வருமாறு:-

100 யார் ஓட்டம்

மேற்பிரிவு ஆண்கள்—எஸ் நடராசா, எஸ் எஸ். ஓ. முதலி, யே மரியதாஸ்.

மத்தியபிரிவு ஆண்கள்-எஸ் தர்மபுத்திரன், பி யேசுதாசன், எம் பிரான்சிஸ்

கீழ்ப்பிரிவு ஆண்கள்- ஜே. ஜெகநாதன், க இரத்தினேஸ்வரன், க மரி தாஸ்.

கீழ்ப்பிரிவு பெண்கள்- எம் பத்தினிப்பிள்ளை, எஸ மகேஸ்வரி, த சர்வதாரணி.

மத்தியபிரிவு பெண்கள்- அ புஷ்பலட்சுமி, ஜே செல்வமணி, நா தியாகவதி,

மேற்பிரிவு பெண்கள்- யே அருள்மேரி, எஸ இலட்சுமி, க ஜெயவதி.

குண்டெறிதல்

மத்தியபிரிவு ஆண்கள்- ச தருமபுத்திரன், ம பிரான்சிஸ், ம அருளானந்தம்.

மேற்பிரிவு ஆண்கள்- க தருமநாயகம், ச கணேசதாசன், அ சுவாம்பிள்ளை.

நீளம்பாய்தல்

மேற்பிரிவுபெண்கள்-சி, மாசிலாமணி, ஜே சரோஜா, ச. புஷ்பலட்சுமி.

மத்தியபிரிவு பெண்கள்- ச சரஸ்வதி, மா மகேஸ்வரி, அ புஷ்பலட்சுமி.

கீழ்ப்பிரிவு பெண்கள்—ம பத்தினி பிள்ளை, சி மகேஸ்வரி, ச இந்திராணி.

மேற்பிரிவு ஆண்கள்- க. தருமநாயகம், வி லதிஸ்லாஸ், ச கணேசதாசன்.

கயிறடித்தல்

கீழ்ப்பிரிவு பெண்கள்- சி மகேஸ்வரி, டா கருணாதேவி, க சிவநாயகி.

மத்தியபிரிவு பெண்கள்- நா தியாகவதி, ச வேதநாயகி, பி திரேசம்மா,

220 யார் மேற்பிரிவு-பெண்கள்—கே. மாசிலாமணி, இ இலட்சுமி, இ நாகரத்தினம்.

220 யார்

மத்திய பிரிவு-பெண்கள்— அ புஷ்பலட்சுமி, ச சரஸ்வதி, யே சுசீலா.

150 யார்

கீழ்ப்பிரிவு-பெண்கள்—ச சரஸ்வதி, அ அன்னபூரணி, சி மகேஸ்வரி.

ஒருமைல் ஓட்டம்

மேற்பிரிவு-ஆண்கள்—சி கிறிஸ்தோப்பர், எஸ் சுவாம்பிள்ளை, க கணேசபிள்ளை.

அஞ்சலோட்டம்

ஆண்கள்-கீழ் பிரிவு —மகா வித்தியாலயம, றோ க ஆ பாடசாலை, சைவப்பிரகாச வித்தியாசாலை.

அஞ்சலோட்டம்

ஆண்கள்-மத்திய பிரிவு— மகாவித்தியாலயம் றோ க ஆ பாடசாலை, சைவப்பிரகாச வித்தியாசாலை.

அஞ்சலோட்டம்

ஆண்கள்-மேற்பிரிவு — மகா வித்தியாலயம், றோ க ஆ பாடசாலை.

அஞ்சலோட்டம்

பெண்கள-மேறபிரிவு — றோ க பெ பாடசாலை, மகாவித்தியாலயம்.

கயிறடித்தல்

மேற்பிரிவு—இ நாகரத்தினம், கே மாசிலாமணி, வே செல்வராணி

220 யார்

கீழ் பிரிவு—க இரத்தினேஸ்வரன், ப பேரம்பலம் ஜே ஜெகநாதன்.

220 யார்

மத்திய பிரிவு-ஆண்கள்— ச தருமபுத்திரன், ம பிரான்சிஸ், த நடராசா.

220 யார்

மேற்பிரிவு- ஆண்கள்—கிறிஸ்தோப்பர், க தர்மநாயகம், ம லதிஸ்லாஸ்

சென். ஜோன்ஸ் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி ஜூலை மாதம் 3-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு ஜி. சி. நைல்ஸ் கலந்து கொள்வார். திருமதி நைல்ஸ் பரிசுகளை வழங்குவார்.

வரி விளம்பரம்

நன்றி நவிலல்

சென்ற வெள்ளிக்கிழமை (25-6-65) காலஞ்சென்ற எமது தாயாரும், கே. செல்லத்துரை அவர்களின் மாமியாருமாகிய திருமதி செ. சின்னம்மாவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட அன்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்,

இங்ஙனம் செ. காசிப்பிள்ளை (பங்காளர் ஆ. அப்பையா அன் கோ), செ. பொன்னுத்துரை (உரிமையாளர்: மகாத்மா ரெக்ஸ்டைல்ஸ்) கே. செல்லத்துரை (திருநெல்வேலி கிருஷிக இலாக்கா) 585

விற்பனைக்கு

எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்க விரும்புகிறீர்களா? இதோ எமது புதிய ஸ்தாபனத்திற்கு விஜயஞ்செய்யுங்கள். அத்துடன் நிக்கல் குரோமியம், எலக்ற்றோ பிளேற்றிங்கும் செய்துகொடுக்கப்படும்.

பாலன் எலெக்ற்றோ பிளேற்றிங் வேர்க்ஸ், 124, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 584

B. S. A. பன்ரம் 175 (EL 5000 தொடரிலக்கம்) மிக நல்ல நிலைமை, விற்பனைக்கு அல்லது 3 15 சைக்கிளுடன் மாற்றுவதற்கு- ஆனந்தா அச்சகம், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 583

25 ஸ்ரீ 1077 இலக்கத்தைக் கொண்ட டேவிட் பிறவுண் உழவு இயந்திரமும், பெட்டியும் (ட்ரெயிலர்) பூநகரி ப. நோ. கூ. ச. சமாஜத்தில் விற்கவிருக்கின்றன. விபரங்கட்கு மேற்படி சமாஜக் காரியதரிசியுடன் தொடர்புகொள்ளவும். 587

தொய்வு, சுசம், நீரழிவு, வெண்ணோ முதலிய பலவகையான வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். நீதிமார் மற்றும் பிரமுகர்களெம்மிடம் சிகிச்சை பெற்றுய்ந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

விளையாட்டுப்போட்டியும் பொதுக் கூட்டமும்.

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி ஜூலை மாதம் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் குலேந்திரனும் பாரியாரும் கலந்து கொள்வார்கள்,

அன்றுமாலை 6 மணிக்கு காலஞ்சென்ற திரு. வ. வீரசிங்கத்தின் புகைப்படம் திரை நீக்கஞ் செய்வதோடு பொதுக் கூட்டமும் நடைபெறும்.

3 நாட்களில் 103 அகதிகள் வந்தனர்

பேர்லின், ஜூன் 30

ஜூன் 3-4 திகதிகளில் மேற்கு ஜெர்மனியிலிருந்தும், மேற்கு பெர்லினிலிருந்தும் 103 பேர் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வசிப்பதற்காக இங்கு வந்தனர். அவர்களில் 60 பேர் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு சென்றவர்களாவர். அங்கே நிலைமை பாதகமாகவிருப்பதால் மீண்டும் திரும்பி வந்துள்ளனர்.

இருகுழந்தைகளுடன் மேற்கு ஜெர்மனிக்கு சென்று மீண்ட டொன் தம்பதிகள் தாங்கள் பல ஆண்டுகளாக அங்கே இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டனரென்றும், அதிகமான வாடகை கொடுத்து குடிசைகளில் வசிக்க நேர்ந்ததென்றும் கூறினர்.

தேசப்படத்தை மாற்ற முயற்சி

பொன், ஜூன் 30

மேற்கு ஜெர்மனியில் ஸ்டட்கார்ட் எனும் இடத்தில் நடந்த ஒரு கூட்டத்தில், ஐரோப்பிய தேசப்படத்தை மாற்றியமைக்கும் முயற்சிக்கு ஆதரவு அளிப்பதெனறும் முனிச் உடன்படிக்கையின்படி இட்லரால் 1938ல் கைப்பற்றப்பட்ட செக்கோஸ்லாவகியாவின் பகுதிகளைத் திரும்பப் பெறவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய மேற்கு ஜெர்மன் போக்குவரத்து அமைச்சர், செக்கோஸ்லாவகியாவுக்குச் சட்டபூர்வமாக சொந்தமாகியுள்ள பிரதேசங்களைத் திரும்பப் பெறுவது பற்றிக் குறிப்பிட்டார்.

ஒரு முக்கிய அறிவித்தல்

வரதரின் பல குறிப்பு

தமிழ் டைரக்டரி 1965—66

ஏற்கெனவே விண்ணப்பித்தவர்களுக்குப் பிரதிகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பெருந்தொகையான பிரதிகளைக் கட்டி (பைண்டிங் செய்து) முடிப்பதில் தாமதமேற்படுவதால் விண்ணப்பித்த அனைவருக்கும் பிரதிகள் கிடைக்க இன்னும் சுமார் மூன்று வாரங்கள் செல்லக்கூடும். பிரதிகள் தற்செயலாகக் கிடைக்கத் தவறியவர்கள் 17-7-65 ன் பின்னரே எமக்கு அறிவிக்கவும்.

○ எமது பிரதிநிதிகளிடம்நேரில்விண்ணப்பித்தவர்களுக்குப் பெரும்பாலும் அவர்களே கொண்டு வந்து தருவார்கள்.

இதுவரை விண்ணப்பிக்காதவர்கள்(பார்சல் செலவு சேர்த்து) ரூபா 11-00 அனுப்பினால் ஒரு பிரதி அனுப்பி வைக்கப்படும்.

வரதர் வெளியீடு

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

‘தமிழ் நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டும்’

சுழிபுரம், புதன்

"தமிழ் மொழியிலுள்ள இலக்கிய நூல்கள் எல்லாம் ஆங்கில மொழியில் மொழி பெயர்க்க வேண்டும். அப்படிச் செய்வதால் தமிழ் மொழி வளர்ச்சியடையும். நாம் அண்மையில் பட்ட கஷ்டங்கள் பல. கஷ்டங்கள் மேலும் அடையாமல் உலக நாடுகளுடன் குறிப்பாக இந்திய நாட்டு மக்களுடன் இலக்கிய, சமூக, அறிவு ஆகிய துறைகளில் தொடர்பு கொள்ளவும் நாம அங்கு செல்லவும் அவர்கள் இங்கு வந்து போகவும் அரசாங்கம் தமது கட்டுப்பாடுகளை எல்லாம் நீக்க வேண்டும்" என்று வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பேசிய வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் திரு. அம்பிகைபாகன் குறிப்பிட்டார்.

விழாவிற்கு சே. பி. ஹான் தலைமை வகித்து பேசும் போது:

"நல்ல கல்விமான்கள் நிறைந்த கிராமம் எப்போதும் சிறப்பு அடையும் மேலும் வளர்ச்சியடையும்" என்றார். / காவலர் பள்ளிக்கூட தலைமையாசிரியர் வித்துவான் திரு ஆ. திருநாவுக்கரசு கச்சியப்பர் காட்டிய நெறி என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

ஓவைதுரை நடராசன் பேசும் போது கூறியதாவது:

உலகிலுள்ள எந்த மொழி இலக்கியங்களிலும் காணமுடியாத இன்பத்தை தமிழ் மொழி இலக்கியங்களில்தான் காண முடியும் என்பதை எல்லோரும் உடன்படுக் கொள்கின்றார்கள். தமிழ் இலக்கியங்களில உள்ள செய்யுள்களை தொட்ட இடம் எல்லாம் சுவை காணக்கூடியதாக இருக்கின்றன. கம்பன் தனது காப்பியத்தின் திறமையை நிலைநாட்ட தனது செய்யுள் எவற்றிலும் ஐயுறவு தவறுகள் ஏற்படாமல் அமைத்துள்ளார். காப்பியத்தின் சிறப்பு அங்கு தான் உள்ளன. குகன் இராமன் மேல் கொண்ட பற்றை விளக்க உயர்ந்த மரத்திலுள்ள தேனையும் ஆழ்கடலிலுள்ள மீனையும் உணவாகக் கொடுப்பதன் மூலம் விளக்கியுள்ளதை காட்டுகின்றது. அரசியல் வாதிகளால், பயில்வான்களால் செய்யமுடியாத சேவையை அருள்வாதிகள் (சமயகுரவர்கள்) செய்து முடித்துள்ளனர். தம்மால் செய்ய முடியாததை மற்றவர் செய்யும்படி கூறினர் அரசியல் வாதிகள். தம்மால் செய்யக் கூடியதை மற்றவர்கள் செய்விக்க முடியாதவர்களாக திண்டாடினர் பயில்வான்கள். எல்லோராலும் எப்போதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதை செய்தனர் அருள்வாதிகள். காலத்தால் அரசியல் வாதிகளும் பயில்வான்களும் மறைந்து வந்தனர். ஆனால் அருள்வாதிகள் அன்று தொட்டு இன்று வரை மக்களால் மதிக்கப்பட்டு நினைவு கொள்ளப்பட்டதை நாம் அறிவோம் காண்கின்றோம். அருள் வாதிகள் காட்டிய மார்க்கம்தான் எமக்கு இன்பம் கிடைக்கும் மார்க்கமாகும். எம்மால் அடையக் கூடிய இன்பம் சைவத்திலும் தமிழிலும் நிறைய உண்டு. அது தான் எமது இன்பம் என்றார்.

திரு. க. ஞானசம்பந்தன் நன்றி கூறினார்.

இயற்கை மரணமா இல்லையா?

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் காய்ச்சலென்ற காரணத்தோடு சேர்க்கப்பட்ட பளை கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னையா (வயது 48) என்பவர் ஆஸ்பத்திரியில் மரணமானது குறித்து மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. நடராசா மாவட்ட வைத்தியஅதிகாரி டாக்டர் எம். வேதாரணியத்திடம் பிரேதபரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனை நடத்திய வைத்திய அதிகாரி சின்னையாவின் உடலில் உள்காயங்கள் இருப்பதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி சின்னையா கொலைசெய்யப்பட்டாரா அல்லது இயற்கை மரணமடைந்தாரா என சந்தேகித்து தீர்ப்புக் கூறாது இதுபற்றிப் புலன் விசாரணை நடத்துமாறு பொலிசாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

சின்னையா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது பரிசோதித்த டாக்டரிடம் தமக்கு வயிற்றுவலி எனத் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண் ஆணாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல பத்திரங்கள் நிரப்பப் பட்டு முத்திரைகள் ஒட்டி சமாதான நீதவான் முன்னிலையில் கையெழுத்துப் பெறவேண்டும். பின்னர் இவைகளை குறிப்பிட்ட கந்தோருக்கு பாரப்படுத்த வேண்டும். இச்சிறு தவறை நிவர்த்திசெய்வதற்கு சுமார் 100 ரூபாவரை செலவாகும் என்றும் தெரியவருகிறது. இச்செலவிற்கு பின்னரும் உரிய நேரத்தில் பிறப்புச் சாட்சிப் பத்திரம் கிடைக்குமா என்பதுதான் கேள்வி.

லஞ்ச ஒழிப்பு!

யாழ்ப்பாணம், புதன்

ஏற்கனவே தீர்மானிக்கப் பட்ட படி யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து இலாகாவில் சாரதிகளுக்கு லைசென்ஸ் வழங்கும் சோதனையின் போது இம்மாதம் 28-ம் திகதி முதல் பொது மக்கள் சார்பில் ஒருவர் பிரசன்னமாய் இருப்பார் என்று அறிவிக்கப் பட்டிருந்தது.

அதன் பிரகாரம் 28-ந் திகதி நடைபெற்ற சோதனைக்குச் சென்ற மூன்று விண்ணப்பதாரர்களும் சாரதி லைசென்ஸ் சோதனையில் சித்தியெய்ய வில்லை எனத் தெரிய வருகிறது. லஞ்சத்தையும் மோசடியையும் தவிர்ப்பதற்காகவே இப்புதுமுறை கையாளப்பட்டது. இப்புது முறையை அறிந்த விண்ணப்பகாரர்கள் சிலர் அன்று சோதனைக்குச் செல்ல வில்லையாம்.

தீ விளைத்த சேதம்

முல்லைத்தீவு, புதன்

நெடுங்கேணியிலுள்ள பெட்ரோல் நிலையத்திற்கருகிலுள்ள ஸ்டோரில் ஏற்பட்ட தீ விபத்தினால் 25,000 ரூபா நஷ்டம் மேற்பட்டுள்ளது.

நெடுங்கேணியிலுள்ள ‘சிவகங்கா’ ஸ்டோருக்கு சொந்தமான பெற்றோல் நிலையத்தில் கார் ஒன்றுக்கு பெற்றோல் அடித்துக் கொண்டிருந்த சமயம் அருகில் அரிக்கன் லாம்புடன் ஒருவர் சென்ற பொழுதே இவ்விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கிராம சேவகர் திரு. இ. விக்கினேஸ்வரன், பொதுமக்களின் உதவியோடு, மற்றும் கட்டிடங்களுக்கு தீ பரவாமல் அணைத்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

வவுனியாவில் சுகாதார விழா

வவுனியா, புதன்

"நோய்யற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கிணங்க நமது நாட்டிலும் நமது மக்களும் நோயற்றவர்களாக வேண்டுமாயின் கட்டாயம் சுகாதாரத்தை அனுசரித்து அதன்படி நடக்க வேண்டும்" என்று வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சுகாதார விழாவுக்குத் தலைமைதாங்கிய வவுனியா நகரசபைச் தலைவர் திரு. ம. பொன்னையா கூறினார்

திரு. பொன்னையா தொடர்ந்து பேசும் போது, இவ்விழா வருடம்தோறும் இலங்கையில் பல பாகங்களிலும் கொண்டாடப்படுகிறதெனவும் நோய் வராமல் தடுத்தலும் வந்த நோயைப் பரவிடாமல் தடுத்தலும் மிக முக்கியமென்றும் கூறினார்.

அடுத்தாற் போல் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் வவுனியா திரு எஸ். கணேசன் வரவேற்புரையில் சுகாதாரத்தின் அத்தியாவசிய முறையும், வவுனியாவில் வந்த நெருப்புக் காய்ச்சலை உதாரணத்துக்கு எடுத்துக்காட்டி அதனால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைப் பற்றியும் நன்கு விளக்கப்படுத்தினார்.

திருவாளர்கள் எஸ். கணேசன், எஸ். சிவஞானசுந்தரம், விஜயகூன், குரேரு ஆகியோர் பேசினார்கள்.

* * *

சுகாதாரவிழா

வவுனியா, புதன்

"வருங்காலத்தில் வளரும் செல்வங்களாகிய பிள்ளைகள் சுகாதாரம் உள்ளவர்களாக வளரவேண்டும். அப்படி வளர்ந்தால் தான் இவ்வுலகில் திடகாத்திரம் உள்ள மனிதர்களாக முன்வந்து, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் உதவி செய்யக் கூடியவராக இருக்கமுடியும். அத்துடன் அவர்களுக்கு நோயற்றவாழ்வு வாழவும் இப்படிப்பட்ட சுகாதார வாரங்கள் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும். பாடசாலைப்பிள்ளைகள் அத்தியாவசியமாக நல்ல சுத்தமான உடை, சுத்த போசனம், நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு சுகாதாரவாரம் அத்தியாவசியம்"

இவ்வாறு ஓமந்தை வட்டார சுகாதார விழாவில் ஓமந்தை மகாவித்தியாலய அதிபர் திரு சி. கந்தையா கூறினார். இவ்விழா ஓமந்தை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

விவசாயப் போதனாசிரியர் திரு காராளசிங்கம் பேசும் போது சுகாதாரமும் விவசாயமும் சகோதரர்கள் என்றும் விவசாயத்துக்கும் சுகாதாரத்துக்கும் நெருங்கிய உறவுகள் இருப்பதாகவும், சுகாதாரத்தை பிரதானமாக விவசாயிகள் கைக்கொண்டால் தான் விவசாயத்திலும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம் என்றும் கூறினார்.

மன்னார்-வவுனியா மாவட்ட வைத்திய கலாநிதி திரு கே. சிவஞானரத்தினம் திருவாளர்கள் கா. கணபதிப்பிள்ளை, சு வகேவணவேல், எம். நடராசா ஆகியோரும் பேசினார்கள்.

ஆசிரியர் இடமாற்றத்துக்கு பெற்றோர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வியாழன்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் திரு சி. ஜெகநாதனின் திடீர் இடமாற்றத்தை ஆட்சேபித்து கல்வி மந்திரிக்கு அப்பகுதி மக்கள் ஓர் தந்தி அனுப்பியுள்ளனர். மாணவர்களுடைய கல்வியில் மிகவும் சிரத்தையுள்ள இவ்வாசிரியரின் இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்யும்படி அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரியாதிகாரி இடமாற்றம்

முல்லைத்தீவு, புதன்

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரிவு காரியாதிகாரி திரு என். மாணிக்கராசா ஜூலை முதல் திகதி முதல் வலிகாமம் மேற்குப் பிரிவு காரியாதிகாரியாக இடமாற்றலாகிச் செல்கின்றார்.

உதவித் தாதிகளுக்கு மந்திரியின் யோசனை

பம்பலப்பிட்டி, வியாழன்

கங்காணிகள் செய்யும் வேலைகளை ஜூலை முதலாம் திகதியிலிருந்து செய்வதில்லையென அகில இலங்கை தாதிகள் சங்கம் செய்துள்ள தீர்மானத்தை அமுல்நடத்துவதை ஒத்திப்போடுமாறு சுகாதார அமைச்சர் திரு எம். டி. எச். ஜெயவர்த்தன சங்கத்துக்கு யோசனை கூறியுள்ளார்.

சங்கப் பிரதிநிதிகளுடன் மந்திரி நடத்திய பேச்சுவார்த்தையின்போதே மந்திரி மேற்கண்ட யோசனையைத் தெரிவித்தார்.

கங்காணிகள் செய்யும் வேலையை செய்வதற்கு கூலியாட்கள் அமர்த்தப்படுவார்கள் என மந்திரி உறுதிதெரிவித்து அதுவரை உதவித் தாதிகள் அந்த வேலையைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

சங்கம் ஏற்கனவே செய்து கொண்ட முடிவை சங்கப்பிரதிநிதிகள் மாற்ற முடியாதென தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

சங்கத்தின் பொதுக்கவுன்சிலின் அங்கீகாரம் பெற்ற பின்னரே இதுபற்றி முடிவு செய்ய அதிகாரம் இருக்குமென்பதால் இந்த அங்கீகாரம் பெற்றபின் மந்திரிக்கு இவர்கள் இதுபற்றித் தெரியப்படுத்துவார்களென நம்பப்படுகிறது.

ஐம்பது ரூபா அபராதம்

முல்லைத்தீவு, புதன்

தண்ணீரூற்று உணவு உற்பத்திமேற்பார்வையாளர் திரு கா. இரத்தினசிங்கம், சயிக்கிளில் லைட் இல்லாமல் சென்றதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், முல்லைத்தீவு மாஜிஸ்டிரேட் 50 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

22-வது ஆண்டு பூர்த்தி விழா

கோண்டாவில், புதன்

இலங்கை கம்யூனிஸ் கட்சியின் 22-வது ஆண்டு பூர்த்தி விழா வருகிற சனிக்கிழமை சண்டிலிப்பாய் மடத்தடி மைதானத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. வடபகுதியைச் சேர்ந்த கம்யூனிஸ் கட்சி பிரமுகர்கள் உட்பட வேறுபலரும் இவ்விழாவில் உரை நிகழ்த்துவார்கள்.

விசேஷ கமிட்டி ஆலோசனை

கொழும்பு புதன்

கைத்தொழில் அமைச்சின் திட்டங்களுக்கு ஆலோசனை தெரிவிக்க கைத்தொழில் மந்திரி திரு பிலிப் குணவர்த்தனவால் நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டி தனிப்பட்டவர்களின் கைத்தொழில் திட்டங்களுக்கும் ஆலோசனை வழங்கும்.

வருடாந்தவிழா

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த ஸ்தாபக ஞாபகார்த்த விழா ஜூலை மாதம் 3-ம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

அன்று மாலை 6 மணிக்கு கதம்பநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

கதாப்பிரசங்கம்

மாலை 6-30 மணிமுதல் கோண்டாவில் பிள்ளையார் கோவிலில் சம்பூர்ண ராமாயண விரிவுரையில் "மாயமான்" என்னும் சரிதை ஸ்ரீமத் வி. எஸ். எஸ். மணிபாகவதர் கதாப் பிரசங்கம் செய்வார்,

இராணுவத்தினர் செயல்குறித்து விசாரணை

சுழிபுரம், புதன்

இராணுவத்தினரின் தகாத செயல் சம்பந்தமான மாதகல் பொதுமக்களின் புகார் பற்றிய விசாரணை மாதகல் முகாமில் நடைபெற்றது. இவ்விசாரணையில் மாதகல் கிராமசேவையாளர் திரு. ஆ. முருகேசு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் எஸ். பி. யோசப் ஆகியோர் கலந்துகொண்டனர். இராணுவத்தினர், இனிமேல் எவ்வித தொல்லையும் ஏற்படாமல் தாம் பார்த்துக்கொள்வதாகவும் தம்முடன் பொதுமக்கள் உறுதுணையாக இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். இராணுவத்தினரின் உடையைப்போல் உடையணிந்து மக்களைச் சிலர் பயப்படுத்துவதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

டாக்டரின் சேவைக்கு பாராட்டு

மாவிட்டபுரம், புதன்

மயிலிட்டி காசநோய் ஆஸ்பத்திரியில் இரண்டாவது வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வைத்திய விரிவுரையாளர் பதவி ஏற்றுச் செல்லும் டாக்டர் என். பரமஞானத்துக்கு மயிலிட்டி சுகாதாரநிலைய நோயாளர் நலவிருத்திச்சங்கத்தினரால் நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தின்போது தலைமைவகித்துப் பேசிய டாக்டர் எம். தேவராசன், டாக்டர் பரமஞானம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய கடந்த மூன்று வருடகாலத்தில் காசநோயாளருக்குச் செய்த தொண்டு மிகவும் சிறப்பு வாய்ந்ததென்றும் இதனால் ஆஸ்பத்திரிக்கே அவர் பெருமை தேடித் தந்தாரென்றும் குறிப்பிட்டார்.

ஆஸ்பத்திரியிலுள்ள வார்டுகளிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகள் டாக்டர் பரமானந்தத்தின் சேவைபற்றிப் பாராட்டிப் பேசினர்.

பக்தவத்சலம் நந்தா பேச்சு

புதுடில்லி, ஜூன் 30

தமிழ் நாட்டு முதன் மந்திரி திரு பக்தவத்சலம் உள்நாட்டு மந்திரி திரு. நந்தாவுடன் ஆட்சி மொழி பற்றிப் பேச்சு நடத்தினர்.

ரசீது யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டரில் அடைவு ரசீது ஒன்று கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி அதைப் பெற்றுக் கொள்ளலாம்.

சன்மானம்

N 131590, N 131587 N 183020, C 274476 இலக்கங்கொண்ட நான்கு பங்கீட்டரிசிப் புத்தகங்கள் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்கருகாமையில் காணமற் போய்விட்டன. இவற்றை என்னிடம் சேர்ப்பிப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ச. முருகேசு, (பென்ஷனர்), கதிர்காமகோவிலடி, இருபாலை, கோப்பாய்.

588

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.